# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 155/மா/2022**

**நாள் : 30.10.2022**

திருவாளர். K. மாரியப்பன் (ம) B. விஜயகுமார்,
சென்னை– 600 021. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம்–5,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கொருக்குப்பேட்டை 9வது தெரு, காமராஜர் நகர், கதவு எண்.193/20 என்கிற முகவரியில் வசிக்கும் திருவாளர் K. மாரியப்பன் மற்றும் B. விஜயகுமார் ஆகியோரின் 12.09.2022 நாளிட்ட மனு, 13.09.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 155/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, கொருக்குப்பேட்டை 9வது தெரு, காமராஜர் நகர், கதவு எண்.193/20 என்கிற முகவரியில் வசிக்கும் திருவாளர் K. மாரியப்பன் மற்றும் B. விஜயகுமார் ஆகியோரின் முறையீட்டு மனுவில்,

> “நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எனது தாயார் கடந்த 19.04.2019 அன்று இறந்துவிட்டார். அதனையடுத்து அவரை வண்ணார் பேட்டையில் உள்ள இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்து மயான ரசீதை மேற்கண்ட மாநகராட்சி அலுவலகத்தில் கொடுத்து இறப்பு சான்றிதழை கேட்டு விண்ணப்பித்து இருந்தேன். எனினும் மூன்று வருட காலமாகியும் தற்போதுவரை இறப்பு சான்றிதழை இணையத்தளத்தில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி

அதிகாரிகள் பதிவேற்றம் செய்யவில்லை. ஒவ்வொரு முறையும் நேரில் சென்று கேட்டாலும் இன்று, நாளை என காலம் கடத்தி வருகின்றனர். இதனால் தற்போது வரை எங்களால் இறப்பு சான்றிதழ் பெறமுடியவில்லை.

சென்னை மாநகராட்சி மண்டலம் - 5க்கு உட்பட்ட பெரும்பாலான இடங்களில் இதே போன்ற நிலைமையை உள்ளது. அதாவது, அவர்கள் கேட்கும் பணத்தை கொடுக்கும் அல்லது தரகர்கள் மூலம் வரும் நபர்களுக்கு மயான ரசீதை பெற்றுக்கொண்டு இறப்பு சான்றிதழை இணையத்தளத்தில் உடனே பதிவேற்றம் செய்து தருகின்றனர். மற்ற பொதுமக்களுக்கு வழக்கம்போல் கால தாமதம் செய்கின்றனர். இது தொடர்பாக பலமுறை நேரில் சென்று புகார் அளித்தும், 10.08.2022 அன்று எழுத்துப்பூர்வமான புகார் அளித்தும் தற்போதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, இந்த புகார் மனுவினை விரைவில் விசாரணை செய்து, மேற்கண்ட இறப்பு சான்றிதழை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய தகுந்த உத்தரவினை பிறப்பிக்க வேண்டியும், மண்டலம்-5க்கு உட்பட்ட பகுதிகளில் இறப்பு சான்றிதழ் பதிவுசெய்ய காலதாமதம் ஆகும். நிகழ்வை போக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் தங்களை நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 7.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர்கள் 20.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :

"மேற்கண்ட மனுதாரர்களில் இருவரில் ஒருவரான K. மாரியப்பன் தாயார் கடந்த 19.04.2019 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது உடல் தண்டையார்பேட்டையில் உள்ள இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டு, மயானத்தில் பெறப்பட்ட மயான ரசீதை மண்டலம் - 5 அலுவலகத்தில் கொடுத்து இறப்பு சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்து இருந்தோம். ஆனால் மூன்று வருடங்கள் ஆகியும் தற்போதுவரை இறப்பு சான்றிதழை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யாமல் காலம் தாழ்த்தி அலைகழித்து வருகின்றனர். மேலும், இது குறித்து 10.8.2022 அன்று எழுத்துப்பூர்வமான புகார் அளித்தும், மண்டலம் - 5 அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே உரிய விசாரணை மேற்கொண்டு இறப்பு சான்றிதழை இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல நல அலுவலர் 20.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"மனுதாரர் திரு.மாரியப்பன் தன்னுடைய தாயார் திருமதி. கே.முத்துலட்சுமி 19.04.2019 அன்று இறந்து விட்டதாகவும், வண்ணாரப்பேட்டை மயானத்தில் சமாதி செய்ததாகவும், மயானத்தில் பெறப்பட்ட இறப்பு சான்றிதழை ஒரு வருடம் கழித்து மண்டல அலுவலகத்தில் சமர்ப்பித்து இறப்பு சான்றிதழ் கோரினார். மனுதாரரின் தாயார் இறந்து ஒரு வருட காலம் முடிந்த நிலையில், விதிகளின்படி படிவம் 4 ஏ சமர்ப்பிக்கப்படவேண்டும். எனவே, மனுதாரரை ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் மனு செய்து, மனுதாரரின் தாயார் இறப்பு சான்றிதழ் உண்மைத்தன்மை பற்றி அறிக்கை பெற்று மண்டல அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு

கேட்டுக்கொள்ப்பட்டது. மனுதாரரின் சொந்தக்காரர் அதாவது இறந்த திருமதி.முத்துலட்சுமி என்பவரின் மருமகன் 10.02.2021 அன்று மண்டல அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்து, உரிய படிவத்தை வட்டாட்சியர் அலுவலத்திலிருந்து பெற்று சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்து கையொப்பமிட்டு சென்றுள்ளார். (நகல் சமர்ப்பிக்கப்படுகிறது) ஆனால் இன்று வரை மேற்கண்ட படிவம் 4ஏ மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. இணையதளத்தில் இறப்புச் சான்றிதழை பதிவேற்றம் செய்ய, படிவம் 4ஏ மற்றும் ஆர்.டி.ஓ. அறிக்கை மனுதாரரால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் மேற்கண்ட திருமதி முத்துலட்சுமி அவர்களின் இறப்புச் சான்றினை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம்-5ன் மண்டல அலுவலர் அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன :

சென்னை, கொருக்குப்பேட்டை எண்.193/20, காமராஜர் நகர், 9வது தெருவில் வசிக்கும் திரு. K. மாரியப்பன் அவர்களின் தாயார் திருமதி K. முத்துலட்சுமி 19.4.2019 அன்று இறந்ததை அடுத்து சென்னை மாநகராட்சி, வண்ணாரப்பேட்டை இந்து மயான காப்பாளரிடம் அடக்கம் செய்யப்பட்டதற்கான ரசீதை (எண்.6455) சுமார் ஒரு வருடம் கடந்து 10.02.2021 அன்று பெற்றுள்ளதாக மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு அளித்துள்ள ஆவணங்களில் தெரியவருகிறது.

மேலும், மண்டலம் -5ன் அலுவலர்கள், இறப்பு சான்றிதழ் பெற, இறந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆனதால், ஆர்.டி.ஓ. அவர்களிடம் மனு செய்து, இறப்பின் உண்மை சான்றிதழ் பெற்று, படிவம் 4A வுடன் மண்டல அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வாய் மொழியாக கேட்டுக் கொண்டதாக அறியமுடிகிறது. மண்டல அலுவலர்கள் இதனை எழுத்துபூர்வமாக தெரிவிக்கவில்லை. இருப்பினும், இறந்த மனுதாரரின் தாயாரின் மருமகன் G. சங்கர் அவர்கள் மண்டல அலுவலகத்தில் 10.2.2021 அன்று தண்டையார் பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்து மேற்கண்ட படிவத்தை பெற்று தருவதாக தெரிவித்து கையொப்பம் இட்டுள்ளார் என்பதும் விசாரணை தேதி வரை அதனை பெற்று சமர்ப்பிக்கவில்லை எனவும் அறியமுடிகிறது. விரிவான விசாரணைக்கு பின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

The Registration of Births and Deaths Act 1969 (Act no.18 of 1989) chapter III, Section 13 (3) (Delayed Registration of Births and Deaths) provides as follows:-

"Any Birth or Death has not been registered within one year of its occurance shall be registered only on an order made by a Magistrate of the first class or a Presidency Magistrate after verifying the correctness of the Birth or Death and on payment of the prescribed fee."

மனுதாரர் எப்போது மயான இறப்பு சான்றிதழை மண்டலம் 5ல் சமர்ப்பித்தாரோ, மண்டல அலுவலர்கள், மனுதாரருக்கு, எவ்வாறு மனு சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று எழுத்து பூர்வமாக பதில் அளித்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல், மனுதாரரை மூன்று வருட காலங்கள் அலைக்கழித்ததை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. இவ்வாறு பொது மக்களுக்கு உரிய வழி காட்டாமல் மெத்தனமாக செயல்பட்ட மண்டலம் -5ல் உள்ள சம்பந்தப்பட்ட அலுவலருக்கு உரிய அறிவுரைகள் வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு உத்தரவிடுகிறது. மேலும், மனுதாரரிடம் ஆர்.டி.ஓ.வின் சான்றிதழை பெற்று, படிவம் 4Aவுடன் சமர்ப்பிக்க மனுதாரருக்கு எழுத்து பூர்வமாக பதில் அளித்து, மனுதாரரிடமிருந்து முறையான ஆவணங்கள் பெற்றவுடன் இணையதளத்தில் மனுதாரரின்

தாயார் இறப்பு சான்றிதழை பதிவேற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. K. மாரியப்பன்,
கதவு எண்.193/20, காமராஜர் நகர், 9வது தெரு,
கொருக்குப்பேட்டை, சென்னை – 600 021.

2) திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு,
துர்கா தேவி நகர், தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

3) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) துணை ஆணையர், (Health)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
} *He is requested to ensure the implementation of this order*

5) துணை ஆணையர், மண்டலம் - 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
} *He is requested to ensure the implementation of this order*

6) மண்டல அலுவலர்,
மண்டலம்–5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.61, 7வது தெரு, பேசின் பிரிட்ஜ் சாலை, சிதம்பரம் நகர்,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.

7) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:**
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

02/11/22
செயலாளர்.

2/11/22

Tamil Nadu State Local Bodies Ombudsman
Government of Tamil Nadu
Truth Alone Triumphs
Chennai-600 032